## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் (Behind the Ear Hearing Aids) வழங்குதல்– நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.33 நாள்:16–03–2012

பங்குனி 3, திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.06679/ இவாததி–1/2011, நாள் 18.7.2011.

-----

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11–07–2011 அன்று நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கான ஆய்வுக் கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக ஏனையவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை செய்துள்ளார்கள்.

**“செவித் திறன் குறையுடைய 1000 மாணவ மாணவியர்களுக்கு காதுக்குப் பின்பகுதியில் அணியும் காதொலிக் கருவிகள் தலா ரூ.10,000/ – மதிப்பில் வழங்கப்படும் என்பதாகும்.”**

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வண்ணம். தற்போது செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு உடலில் அணியும் காதொலிக் கருவிகள் (Body level Hearing Aids) மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது என்றும், உடலில் அணியும் காதொலிக் கருவியை அணிந்துகொள்ள செவித் திறன் குறையுடைய மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் தயங்குவதினால், நாளடைவில் அவர்களின் கேட்கும் திறன் பாதிக்கப்பட்டு, பின்னர் பேசும் திறனையும் முழுமையாக இழக்க நேரிடுகிறது என்றும், செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளுக்காவது காதுக்குப் பின்பகுதியில் (Behind the Ear Hearing Aids) அணியும் காதொலிக் கருவிகளை வழங்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என்றும், காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் (Behind the Ear Hearing Aids) ஒன்றின் விலை ரூ.10,000/– என்ற வீதத்தில் செவித்திறன் குறையுடைய 1000 மாற்றுத் தினாளி மாணவ மாணவிகளுக்கு வழங்க ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, பின்வருமாறு ஆணையிடுகிறது.

i. **2011–2012** ஆம் நிதியாண்டில், காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகளை (Behind the Ear Hearing Aids) ஒன்றின் விலை ரூ.**10,000/–** என்ற வீதத்தில் **1000** எண்ணிக்கையிலான செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளுக்கு வழங்க ரூ.**1.00** கோடி(ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்கிறது.

ii. **5** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உடலில் அணியும் காதொலி கருவி தொடர்ந்து வழங்கவும் மற்றும் **6** ஆம் வகுப்பு அல்லது அதற்கு மேலும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் உடலில் அணியும் காதொலி கருவிகள் அணிவதில் அவர்கள் தயக்கம் காட்டுவதால், அவர்களுக்கு மட்டும் காதுக்கு பின்புறம் அணியும் காதொலி கருவிகள் வழங்கவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

iii. பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் செவித்திறன் பாதிப்பு கடுமையாக அல்லது முழுமையாக உள்ளதா என்பதை உறுதி செய்து, காதொலிக் கருவிகளை முதல் கட்டமாக அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் செவித் திறன் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கும், இதர பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கும் இலவசமாக வழங்க வேண்டும்.

iv. காதுக்குப்பின் அணியும் காதொலிக் கருவிகளை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** மற்றும் விதிகள் **2000**–ன்படி திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் கொள்முதல் செய்திட அனுமதிக்கப்படுகிறது.

v. காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ள தோராய விலையான ரூ.**10,000/–**க்குள் மட்டுமே முறைப்படி கொள்முதல் செய்ய வேண்டும்.

vi. உத்தேச செலவு தொகையை விட காதுக்குப் பின்னால் அணியும் காதொலி கருவிகளின் விலை அதிகமாக இருப்பின் நிதி ஒப்பளிக்கப்பட்ட தொகைக்குள் செயற்கை அவயங்களின் எண்ணிக்கையினை கணக்கிற் கொண்டு வாங்கி வழங்கிடவும் அனுமதி வழங்கப்படுகிறது.

vii. உத்தேசித்துள்ள எண்ணிக்கைக்கு மிகாமல் ஒப்பந்தப் புள்ளியில் குறைந்த விலைக்கு காதுக்குப் பின்னால் அணியும் காதொலி கருவிகளின் கிடைக்கும் பட்சத்தில், ஒப்பளிக்கப்பட்ட தொகையில் மீதம் இருப்பின், அதனை அரசு கணக்கில் திருப்பி செலுத்தும்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

viii. மேலே பத்தி **3**(i) ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “2235–சமூக பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் 101. மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II –மாநிலத் திட்டம் – JH மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் –19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்”.
> (த.தொ.கு 2235–02–101–JH-1914)

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு”புது துணைப்பணி” குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வ.செ. பொ–I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை நிதி(வ.செ. பொது-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை இறுதி துணை மானியக் கோரிக்கை 2011–12ல் சேர்க்கும் பொருட்டு உரிய செயற்குறிப்புகளை நிதித் துறைக்கு தகுந்த நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண். நிதி(சந)/94/DS(VS)/2012, நாள்16.3.12.ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1868 (ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் ( மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.

**நகல்:**
நிதித்துறை (சமூக நலம்/வ.செ.பொ.II) சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.